# Working Peoples' Charter

## புலம் பெயர் தொழிலாளர்கள் குறித்து தாமாகவே வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற ஆணையின் முக்கிய கருத்துகள்

புலம் பெயர் தொழிலாளர் பிரச்சனை குறித்து மிகவும் தாமதமாகவும், மிகக் குறைந்த அளவிலும், முக்கியமான தலையீட்டினை உச்சநீதிமன்றம் இறுதியாக தற்போது செய்துள்ளது. புலம் பெயர் தொழிலாளர்கள் தங்களது சொந்த ஊார்களுக்கு 15 நாட்களுக்குள் சென்றடைவதை நடுவண் அரசும் மாநில அரசுகளும் உறுதிப்படுத்த வேண்டும் என்று அண்மையில் இந்த ஆணையைப் பிறப்பித்துள்ளது. மேலும் உச்சநீதிமன்ற ஆணையில் இடம் பெற்ற ஒரு சில முக்கிய கருத்துகள் பின்வருமாறு:

அந்தந்த மாநிலங்களில் ஆங்காங்கே தவித்துக் கொண்டிருக்கும், சொந்த ஊருக்கு செல்ல விரும்பும் புலம் பெயர் தொழிலாளர்களை கண்டறியும் முயற்சியை நடுவண் அரசும் மாநில அரசுகளும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். 15 நாட்களுக்குள்ளாக அவர்களது பயணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும். இத் தொழிலாளர்களை எளிதாக இனங்காணுதல், அவர்களுக்கான பதிவு செய்யும் முறைகளை எளிதாக்குதல், பயண வசதிகள் / ஏற்பாடுகள் குறித்த தகவல்களை வெகுசன ஊடகங்கள் மூலமாக பரவலாக்குதல் போன்றவற்றை உடனடியாகச் செய்யவேண்டும். ஏற்கனவே பல்வேறு மாநிலங்களும் / ஒன்றியங்களும் கோரிப் பெற்றுள்ள 171 சிறப்பு தொடர் வண்டிகளோடு (Shramik Trains) தேவைக்கேற்ப 24 மணி நேரத்திற்குள் கூடுதல் வண்டிகளை நடுவண் அரசு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

சொந்த ஊர்களுக்குத் திரும்பிய புலம் பெயர் தொழிலாளர்களுக்கு தேசிய மற்றும் மாநில அளவிலான வேலை வாய்ப்புத் திட்டங்கள் குறித்து முழுமையான தகவல்களை நடுவண் அரசும் மாநில அரசுகளும் சத்தியப்பிரமாண வாக்குமூலமாக மனு தாக்கல் செய்ய வேண்டும்.

வட்டார மற்றும் மாவட்ட அளவில் மேலே குறிப்பிட்ட வேலை வாய்ப்புத் திட்டங்கள் தொடர்பான தகவல்களைத் தெரியப்படுத்தவும் அது குறித்து புலம் பெயர் தொழிலாளர்களுக்கு போதிய ஆலோசனை வழங்கவும் மாநில அரசுகள் தேவைப்படும் ஆலோசனை மையங்களை அமைக்க வேண்டும். சொந்த ஊர்களுக்குத் திரும்பிய புலம் பெயர் தொழிலாளர்கள் மீண்டும் பழைய வேலைகளுக்குச் செல்ல விரும்பினால் அதற்கான உதவியையும் இவ்வாலோசனை மையங்கள் வழங்க வேண்டும்.

சொந்த ஊர்களுக்குத் திரும்பிய புலம் பெயர் தொழிலாளர்களைப் பற்றிய விபரங்கள் கிராம, வட்டார மற்றும் மாவட்ட அளவில் பாதுகாக்கப்பட வேண்டும். புலம் பெயர் தொழிலாளர்களுக்கான அரசுத் திட்டங்கள் அவர்களுக்கு பயன்பெறும் வகையில் அமைய வேண்டும். தங்களது சொந்த மாநிலங்களுக்கு திரும்பச் சென்றுள்ள புலம் பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறித்த தகவல்கள், அவர்களிடம் உள்ள திறன்கள் மற்றும் அவர்களுக்கு கிடைக்கப்பெறும் வாய்ப்புகள் ஆகியவற்றை பிரமாண வாக்குமூலமாக மாநில அரசுகள் தாக்கல் செய்ய வேண்டும்.

பொதுமுடக்கக் காலங்களில் ஊரடங்கை மீறியதற்காக பேரிடர் மேலாண்மைச் சட்டப்பிரிவு 51- ன் கீழும், பிற தொடர்புடைய சட்டப்பிரிவுகளிலும் புலம் பெயர் தொழிலாளர்கள் மீது பதிவு செய்யப்பட்ட அனைத்து குற்றவியல் புகார்களையும் மாநில அரசுகளும் ஒன்றியங்களும் திரும்பப் பெறுதல் குறித்து ஆலோசிக்க வேண்டும்.

மேற்சொன்ன அம்சங்கள் அனைத்தும் புலம் பெயர் தொழிலாளர்களுக்கு மிகப் பெரிய ஆறுதலாக இருப்பதை பாராட்டும் அதே வேளையில், உச்சநீதிமன்ற ஆணை எழுப்பியிருக்கும் முக்கியமான சில கேள்விகளை இங்கு எடுத்துக்காட்டுவது அவசியமாகும்.

புலம் பெயர் தொழிலாளர்களை இனங்கண்டு பதிவு செய்வதற்கு முறையான வழிவகைகள் இல்லை. அருகாமையிலுள்ள காவல்நிலையங்களிலோ, உள்ளாட்சி அமைப்புகளிலோ இந்த புலம் பெயர் தொழிலாளர்களை எழுதாகப் பதிவு செய்வதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ள வேளையில் காவல் துறையினருக்கு கூடுதல் பயிற்சியும் தொழிலாளர்களுக்கு உதவிட கிராம / வட்டார / மாவட்ட அளவிலான உள்ளாட்சிக் குழுக்கள், கவுன்சிலர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கான பயிற்சியும் அவசியம். பதிவுக்கான படிவங்கள் புலம் பெயர் தொழிலாளர்கள் புரிந்து கொள்ளக்கூடிய அவர்கள் மொழியில் அமைய வேண்டும். மாநில அரசுகளும் ஒன்றிய பிரதேசங்களும் இத்தகவல்களை உள்ளூர் ஊடகங்கள் மூலமாகவும், பெரிய விளம்பரங்கள், வாயிலாகவும் வானொலி மற்றும் பிற சாதனங்கள் மூலமாகவும், அவர்களுக்கான வேலைவாய்ப்புகள் குறித்த தகவல்களை போதிய அளவில் விளம்பரம் செய்ய வேண்டும்.

புலம் பெயர் தொழிலாளர்கள் பதிவுக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் மிகப்பெரிய அளவிலான தகவல்களை பாதுகாப்பதற்கு அரசுகள் மிகுந்த கவனம் எடுக்க வேண்டும். இலட்சக்கணக்கான புலம் பெயர் தொழிலாளர்கள் பற்றிய தகவல் திரட்டு எவ்விதமான சுரண்டலுக்கோ அரசின் கண்காணிப்பிற்கோ பயன்படக்கூடாது. அவர்களின் அந்தரங்கம் முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டும்.

புலம் பெயர் தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு தொடர் வண்டிகளில் உணவும், தண்ணீரும் வழங்கப்பட்டன என்று நடுவண் அரசு முன்வைத்த வாதத்தை உச்சநீதிமன்றம் அப்படியே ஏற்றுக்கொண்டு விட்டது. ஆனால் அடிப்படை சுகாதார வசதிகள் இன்றி, எவ்வித உணவும் வழங்கப்படாமல் இத்தொடர் வண்டிகள் சென்றதை பல்வேறு அறிக்கைகள் வெளிச்சம் போட்டு காண்பித்தன. இத்தொடர் வண்டிகளில் பயணப்பட்ட பல தொழிலாளிகள் ஆங்காங்கே பரிதாபமாக இறந்தததையும் ஒரே நாளில் 9 தொழிலாளர்களின் இறப்பைப்பும் இவ்வறிக்கைகள் எடுத்துரைத்தன. எனவே கூடுதல் தொடர்வண்டிகளை இயக்குமாறு நடுவண் அரசுக்கு ஆணை பிறப்பிக்கும் போது மேற்சொன்ன அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டச் சூழலை மனதில் கொள்ள வேண்டும்.

தங்களது சொந்த ஊர்களுக்கு திரும்பிச் செல்லும் ஒவ்வொரு புலம் பெயர் தொழிலாளருக்கும் பீகார், உத்திரபிரதேசம் மற்றும் பிற மாநில அரசுகள் ரூபாய் 1000 வழங்கியதாக குறிப்பிட்டதை உச்சநீதிமன்றம் அப்படியே ஏற்றுக் கொண்டது. ஒவ்வொரு புலம் பெயர் தொழிலாளிக்கும் அரசால் வழங்கப்பட்ட ஆயிரம் ரூபாய் போதாது. மூத்த வழக்கறிஞர் இந்திரா ஜெய்சிங் பரிந்துரைத்தது போல ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூபாய் 7500 வழங்கப்பட வேண்டும். இந்த இடைக்கால நிவாரணத்தை உச்சநீதிமன்றம் கவனத்தில் கொள்ளுமாறும், கூடுதல் பணப்பலன்களை மாநில அரசுகள் வழங்கிட ஊக்கப்படுத்தவும் வேண்டும்.

இந்த சிறப்புத் தொடர்வண்டிகளில் மேற்கொள்ளப்பட்ட பயணத்திற்கு கட்டணங்கள் வசூலிக்கப்படவில்லை என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. இப்பயணங்களுக்கான கட்டணத் தொகை தொழிலாளர்களிடம் வசூலிக்கப்பட்டது என்பதை பல அறிக்கைகள் வெளிப்படுத்தின. நீதிமன்றம் இவ்விடயத்தைக் கவனத்தில் கொண்டு, இனி விடப்படும் தொடர்வண்டிகளில் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படக்கூடாது என்பதை உறுதி செய்ய வேண்டும். ஒவ்வொரு மாநிலமும் ஒன்றியப் பிரதேங்களும் புலம் பெயர் தொழிலாளர்களை இனங்காண்பதற்கான வழிவகைகளை முறைப்படுத்திட உதவி எண்களையும், உதவி மையங்களையும் அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்க வேண்டும். இதை பொறுப்புணர்வோடு செய்வதற்கு சரியான வழிவகை ஒன்று கிராம மட்டத்திலிருந்து மாவட்டம் மற்றும் தேசிய அளவு வரையிலும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

பல்வேறு தொழிலாளர்கள் தங்களது பழைய வேலையில் சேர்ந்து விட்டனர் என்று பல மாநில அரசுகள் சமர்ப்பித்தற்கான எந்தவொரு தகவலையோ விளக்கத்தையோ உச்சநீதிமன்றம் கேட்கவில்லை. ஒரு மாநிலத்திலிருந்து தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பிச் சென்ற புலம் பெயர் தொழிலாளர்களின் புள்ளிவிபரங்களை மாநில அரசுகள் வழங்கும் போது அம்மாநிலத்தில் தங்கியிருக்கக்கூடிய அல்லது வேலையில் மீண்டும் சேர்ந்து விட்ட புலம் பெயர் தொழிலாளர்களின் உண்மையான மதிப்பீடு குறித்து மாநில அரசுகள் தகவல் ஏதும் வழங்கவில்லை. எதிர்காலத்தில் இன்னும் கூடுதலான தயாரிப்போடு செயல்படுவதற்கு இத்தகைய மதிப்பீடும் பதிவுகளும் அவசியம்.

தங்களது சொந்த ஊர்களுக்கு திரும்பிச் சென்ற புலம் பெயர் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையை திரட்டுவதற்கு ஒவ்வொரு மாநில அரசும் மேற்கொண்ட வழிமுறைகள் குறித்து உச்சநீதிமன்ற ஆணை எதுவும் கூறவில்லை. இது கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கியமான அம்சம்.

உச்சநீதிமன்றத்தின் இந்த ஆணை எந்த அளவு ஒவ்வொரு நிலையிலும் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதைக் கண்காணித்து நீதிமன்றத்திற்கு இது குறித்து அறிக்கை தாக்கல் செய்வோம்.